KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 25.07.2017

| Date of Council meeting | Deceison Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 25.07.17 | 1414 | மன்றப்பொருள்: 1<br>காயல்பட்டணம் நகராட்சியில் 14வது வார்டுக்குட்பட்ட பாஸ் நகர் மூன்றாவது தெரு சாலை மண்சாலையாக இருப்பதால் பொதுமக்கள் நலன் கருதி அதனை சிமெண்ட கல் பதித்து புதியதாக சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 9.68 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கும் மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்காக. | அனுமதிக்கப்பட்டது |
| | 1415 | மன்றப்பொருள்: 2<br>காயல்பட்டணம் நகராட்சியில் SFC-Infrastructure Gap Filling 2013-14 திட்டத்தின் கீழ் நகராட்சி அலுவலக வளாகத்தில் புதிய அலுவலக கட்டிடம் ரூ.150.00இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அலுவலக கட்டிடத்தின் முகப்பில் வாகனங்கள் வந்து செல்வதற்கு சிமெண்ட கல் பதித்து தளம் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.9.80இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கும் மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்காக. | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td>1416</td><td>மன்றப்பொருள்: 3<br>காயல்பட்டணம் நகராட்சியில் புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தில் குடிநீர் விநியோகக்குழாய்கள் பதிக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. நகராட்சியின் அனைத்து சாலைகளும் குடிநீர் விநியோகக்குழாய்கள் பதிக்கப்பட்டதில் சேதமடைந்துள்ளதால் தற்பொழுது பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் மற்றும் வாகனபோக்குவரத்து அதிகம் உள்ள சாலைகளை தேர்ந்தெடுத்து அதனை உடனடியாக மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்,தூத்தக்குடி அவர்களால் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரையின் படி நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு முதல் கட்டமாக மிக மோசமாக உள்ள கீழ்க்கண்ட சாலைகள் மேம்பாடு செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>சாலையின் பெயர்</th><th>மதிப்பீடு (இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>குத்துக்கல் தெரு சாலை (மெய்தீன் பள்ளி முதல் வடக்கு முத்தாரம்மன் கோவில் தெரு வரை) சிமெண்ட கல் பதித்து சாலை மேம்பாடு செய்தல்</td><td>17.00</td></tr>
<tr><td>2</td><td>கோமான் மேல தெரு சாலை (சேது ராஜா தெரு முதல் அருணாச்சலபுரம் முகப்பு வரை) சாலை மேம்பாடு செய்தல்</td><td>17.50</td></tr>
<tr><td>3</td><td>அழகாபுரி சாலை மேம்பாடு செய்தல்</td><td>10.00</td></tr>
<tr><td>4</td><td>அருணாச்சலபுரம் பிரதான சாலை மேம்பாடு செய்தல்</td><td>25.00</td></tr>
<tr><td>5</td><td>காட்டுத்தைக்காத்தெரு முதல் (மெய்தீன் பள்ளி அருகில்) உச்சிமகாளியம்மன் கோவில் தெரு சந்திப்பு வரை சாலை மேம்பாடு செய்தல்</td><td>45.00</td></tr>
<tr><td>6</td><td>வடக்கு முத்தாரம்மன் கோவில் தெரு முதல் சேதுராஜா தெரு வரை சாலை மேம்பாடு செய்தல்</td><td>41.50</td></tr>
</table>
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>7</td><td>தாயிம்பள்ளி சந்திப்பு முதல் புதிய பேருந்து நிலையம் வரை (வழி) பெரிய நெசவுத்தெரு (ஒரு வழிப்பாதை) சாலை மேம்பாடு செய்தல்</td><td>36.00</td></tr>
<tr><td>8</td><td>கீழலட்சுமிபுரம் பிரதான சாலை மேம்பாடு செய்தல்</td><td>26.50</td></tr>
</table>
<br>
ஆதலால் மேற்கண்ட சாலைகளை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேம்பாடு செய்யவும் அதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டினையும் அங்கிகரிக்க அனுமதி வேண்டப்படுகிறது.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>1417</td>
<td>
மன்றப்பொருள்:4<br>
காயல்பட்டணம் நகராட்சியில் குடிநீா் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளா்கள் விநியோகம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 6.70 இலட்சத்திற்கு நகா்மன்ற தீா்மானம் எண்.1320 நாள்.10.11.2016ன்படி அனுமதி பெறப்பட்டு 11.07.2017 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>
1) திரு.டி.மாதவன்,<br>
ஓடக்கரை, மதீப்பீடு ரேட்டை விட 0.06% குறைவு<br>
காயல்பட்டணம்<br>
<br>
2) திரு.ஆா்.தலவானி முத்து,<br>
எண்.38 பூந்தோட்டம், மதீப்பீடு ரேட்டை விட 3.37% கூடுதல்<br>
காயல்பட்டணம்<br>
<br>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி.மாதவன்,காயல்பட்டணம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க அனுமதி வேண்ப்படுகிறது.
</td>
<td>குறைந்த ஒப்பந்துபுள்ளி அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 1418 | மன்றப்பொருள்:5<br><br>காயல்பட்டணம் நகராட்சியில் உச்சிமகாளியம்மன் கோவில் தெரு பகுதி மற்றும் பொன்னன்குறிச்சி தலைமைநீரேற்றும் நிலையம் ஆகிய இடங்களில் கேஸ் குளோரினேசன் பிளாண்ட் அமைக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் குளோரினேசன் செய்யப்பட்ட குடிநீரானது நகராட்சி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது.மேலும் தற்பொழுது மழைக்காலம் வர இருப்பதால் மழைக்காலங்களில் குடிநீரினை மிகவும் பாதுகாப்பான முறையில் வழங்கவேண்டிய நிலையில் இருப்பதால் பொதுமக்ககளின் நலன் கருதியும் குடிநீர விநியோகப்பணி அத்தியாவசிய பணியாக இருப்பதாலும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக குளோரின் சிலிண்டர்கள் வாங்கி பயன்படுத்த ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ.5.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1419 | மன்றப்பொருள்:6<br>காயல்பட்டணம் நகராட்சியில் மழைக்காலங்களில் தேங்கும் மழைநீரினை வெளியேற்ற மழைநீர் வடிகால்கள் போதுமான அளவுக்கு நகராட்சியில் இல்லாததால் மழைக்காலங்களில் அதிக அளவு மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்துகிறது.இதனால் மழைநீர் தேங்கும் முக்கிய இடங்களாக கீழ்க்கண்ட இடங்கள் கண்டறியப்பட்டுள்ளது. மதிப்பீடு தயாரித்து பணிகள் செய்ய அனுமதிக்கு.<br>1) காட்டுத்தைக்காத்தெரு<br>2) மாட்டுக்குளம்<br>3) கீழலட்சுமி புரம்<br><br>ஆதலால் பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடங்களில் மழை நீர் வடிகால்கள் கட்ட மதிப்பீடு தயாரித்து பணிகள் செய்ய அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது. மேலும் மழைநீர் தேங்கும் இடங்கள் கண்டறிந்து வரும் மழை காலத்தில் எதிர்கொள்ளப்படும் மழைநீர் தேக்கம் ஏற்படும் இடங்களில் வாறுகால் அமைத்தல் அல்லது பைப் பதித்தல் மூலம் தண்ணீரை வடிய செய்திட போர்கால அடிப்படையில் பணி செய்ய தீர்மானிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1420 | மன்றப்பொருள்: 7<br>காயல்பட்டணம் நகராட்சியில் தற்பொழுது புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு அத்திட்டத்தின் மூலம் நகராட்சிக்குத் தேவையான குடிநீர் பெறப்பட்டு வரப்படுகிறது. இத்திட்டத்தில் நகராட்சிப்பகுதிகளில் பதிக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோகக்குழாய்களில் வீட்டுக்குடிநீர் குழாய்கள் இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருவதால் அதுவரை ஏற்கனவே நகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் விநியோகக்குழாய்களின் வழியாக பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த குடிநீர் விநியோகக்குழாய்கள் பதிக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டதாலும் தற்பொழுது தேவையான அளவு குடிநீர் மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் தேக்கப்பட்டு வழங்கப்படுவதால் ஏற்படும் அழுத்தத்தின் காரணமாகவும் குடிநிர் குழாய்களில் உடைப்புகள் ஏற்படுவதால் குடிநீர் விரயமாகிறது.ஆதலால் குடிநீர் குழாயில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.6.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | | | |